**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.23/2020 தேதி-11.02.2026
(D.W.1) - அனிஷ்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு எடுத்த இடம் போக மீதமுள்ள இடம் தான் இந்த வழக்கு பட்டிகை சொத்து என்றால் சரிதான். மேற்சொன்ன சமத்துவபுரத்திற்கு எவ்வளவு இடம் எடுக்கப்பட்டது என்றால் 3 ஹெக்டேர் இடம் எடுக்கப்பட்டது. மேற்சொன்ன நிலம் கையகப்படுத்தப்பட்டதாக சொல்லியுள்ளநிலையில் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததால் தான் சரியான முடிவுக்கு வரமுடியும் என்றால் ஏ-பதிவேடு உண்மை நகல் தாக்கல் செய்துள்ளோம். மேற்சொன்னவாறு நிலம் எவ்வளவு எடுக்கப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. பெரியார் நினைவு சமத்துவபுரம் பட்டிகை சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் வடக்கு பக்கம் உள்ளது. சமத்துவபுரத்தையும், வழக்கு பட்டிகை சொத்தை பிரிக்க காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். சமத்துவபுரத்திற்கு வடக்கு பக்கம் யார் யார்க்கு எல்லாம் சொத்துள்ளது என்றால் பெந்தோகோஸ்த் சர்ச் மற்றும் வீடுகள் உள்ளது. மேற்சொன்ன சொத்துகளுக்கு பட்டா கிடையாது என்றால் சரிதான். பட்டிகை சொத்தை நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

2. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடத்தில் குலசேகரம் இருந்து பேச்சிப்பாறை ரோட்டிற்கு மேற்கு பக்கம் தான் பட்டிகை சொத்துள்ளது என்றாலும் மேற்சொன்ன சொத்து வாதியின் வீடு மற்றும் கல்லறை தோட்டம் மற்றும் கிணறு மற்றும் கழிவறை, பேஷ்மண்ட் உள்ளது என்றால் வீடு, கிணறு உள்ளது, கல்லறை இருக்கா என்று தெரியாது. மேற்சொன்ன மாதிரி வரைபடம் வா.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு பட்டிகை சொத்தை தெளிவாக பார்வையிடாததால் தான் கல்லறை உள்ளதா என்று என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் வயது முதிர்ந்த தென்னை மரம், பலா, ரப்பர், மாமரம் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன மரங்கள் எல்லாம் வாதியின் அப்பா காலத்தில் வைத்த மரங்கள் என்றால் தெரியாது. பழைய மரங்களா என்றால் பழைய மரம் ஆகும். வாதி மேற்சொன்ன சொத்துகளை அனுபவித்து வரும் நிலையில் அதை யாரும் தடை செய்யவில்லை என்றால் எங்கள் அலுவலகத்தில் புகார் ஏதும் வரவில்லை. நீதிமன்ற ஆணையர் மனு வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

3. மேற்சொன்னவாறு வழக்கு பட்டிகை சொத்தில் வீடு, கிணறு, மரம், பேஷ்மண்ட் மற்றும் கழிவறை அமைத்துள்ளதை காண்பிக்க தான் புகைப்படம் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன சங்கதிகயை நிருபிக்க வா.சா.ஆ.25 முதல் 31 வரை புகைப்படம் மற்றும் CD தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு வாதிகள் நத்தம் புறம்போக்கு நிலத்தை தங்களுக்கு உரிமைப்பட்ட இடமாக கோருகிறார்கள் என்பதால் நான் அரசுக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன். கிராமப்புரங்களில் குடியிருப்புக்காக ஒதுக்கப்பட்ட இடம் நத்தம் புறம்போக்கு என்றால் சரிதான். பட்டிகை சொத்து நத்தம் புறம்போக்கு என்றால் சரிதான். வாதி மற்றும் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு பட்டா கேட்க உரிமையுள்ளது என்றால் வாதிக்கு உரிமையுள்ளது 4 மற்றும் 5 பிரதிவாதிகள் ஊரில் இல்லை. இது சம்மந்தமாக வாதியும், அவரின் தயாரும் திருவட்டார் தாசில்தாரிடம் பட்டா வழங்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணம் மேற்சொன்ன வாதி மற்றும் அவரின் தயார் திருவட்டார் தாசில்தாரிடம் பட்டா வேண்டும் என்று அளித்த மனு என்றால் வேறும் மனு மட்டும் தான் உள்ளது எண்கள் ஏதும் வழங்கப்படவில்லை.

4. வா.சா.ஆ.8 ஆவணம் வழக்கறிஞர் மூலம் 1 ஆம் பிரதிவாதியான மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு வழக்கு பட்டிகை சொத்து நத்தம்ம புறம்போக்கு நிலம் என்று தெரியும் என்றாலும் மற்ற எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கறிர் அறிவிப்புக்கு எந்தவிதமான பதில் அறிவிப்பும் இந்த நாள் வரை அனுப்பவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தில் வாதி மற்றும் பிரதிவாதி குடும்ப கல்லறை தோட்டம் உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது வீடு மட்டும் தான் பார்த்துள்ளேன். வழக்கு பட்டிகை சொத்தில் வாதியின் அம்மா, அப்பா,வாதியின் சகோதரர் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன மரங்களை பயன்படுத்தியும் வீட்டின் அனுபவத்தையும் வாதி தான் கைவசம் வைத்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பி.வா.சா.2 ஆவணமான அடங்கலில் 26 ஏர் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபன வாக்குமூலத்தில் 26 ஹெக்டேர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 0.26.0 ஹெக்டேர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி வசித்து வரும் வீட்டிற்கு மின் இணைப்பு மற்றும் வீட்டு வரி ரசீது தனது பெயரில் தான் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. நான் என் நிரூபன வாக்குமூலத்தில் வாதியையும் மற்ற நபர்களையும்

அப்புறப்படுத்த வேண்டும் என்று சொல்லியுள்ள நிலையில் மேற்சொன்ன மற்ற நபர்கள் யார் என்றால் வாதியின் பிள்ளைகள் மற்றும் மனைவியை குறிப்பிட்டுள்ளேன். வழக்கு பட்டிகை சொத்தை வாதியின் தகப்பனார் நீண்ட காலமாக அனுபவித்து வந்த சொத்தை அவரின் காலத்திற்கு பிறகு வாதி தன் கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சுமார் 25 ஆண்டுகள் கைவசம் வைத்துள்ளார்கள். நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**2** முதல் **5** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகளை தெரியுமா என்றால் வாதியை தெரியும், பிரதிவாதியை தெரியாது. வழக்கு நிலுவையில் இருந்த போது 2 ஆம் பிரதிவாதி இறந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன 2 ஆம் பிரதிவாதியின் கல்லறை வழக்கு பட்டிகை சொத்தில் தான் உள்ளது என்றால் அதபற்றி தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தில் என்னென்ன உள்ளது என்றால் வீடு, மரம், கிணறு உள்ளது கல்லறை உள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் 3 ஆம் பிரதிவாதி விஜய் பெரியார் சமத்துவபுரத்தில் 5 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டு அதில் வீடு வைத்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தில் யார் வசித்து வருகிறார் என்றால் வாதி வசித்து வருகிறார். மேற்சொன்ன வழக்கு பட்டிகை சொத்தில் வாதியும், பிரதிவாதியும் வசித்து வருகிறார் என்றால் அதுபற்றி தெரியாது. வாதியும் அவரின் தயாரும் பட்டா கேட்டு பலமுறை எங்கள் அலுவலகத்தில் மனு செய்துள்ளார்கள் என்றால் இல்லை. 2 முதல் 5 வரையான பிரதிவாதிகளுக்கு வழக்கு பட்டிகை சொத்தை தவிர வேறு எந்த சொத்தும் இல்லை என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தில் 4 மற்றும் 5 பிரதிவாதியான சிந்து மற்றும் ராணி வீட்டிற்கு பேஷ்மண்ட் அமைத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ-30 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்ட புகைப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பேஷ்மண்ட் தான் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் அமைத்தது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன 2 முதல் 5 பிரதிவாதிகள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கததக்கதல்ல என்றால் சரியல்ல.